# கலைஞர் பூங்கொடி அருந்தவநாதன்




- ப. ஸ்ரீஸ்கந்தன் -

அந்நாட்களில் நாடகங்கள் கூத்து என்றும் அதில் நடிப்பவர்கள் கூத்தாடிகள் என்றும் பொதுவாக அழைக்கப்பட்டனர். கூத்தாடிகள் என்பது இழிவான சொல்லாக பார்க்கப்படப் பெண்கள் கூத்தில் பங்குபற்றுவது மிகவும் அரிதாகவே இருந்து வந்துள்ளது. பெரும்பாலும் ஆண்களே பெண் வேடங்களில் தோன்றினர். இன்று இந்நிலைமை சற்று மாறி இருப்பதைப் பார்க்கலாம். ஆயினும் கூத்துக் கலையில் பெரிதாக எவ்விதமான மாற்றங்களும் நிகழ்ந்து விடவில்லை.

எங்கள் மரபின்படி கூத்து என்பது ஆட்டமும் பாட்டும் வசனமும் சேர்ந்ததாக அமைந்திருக்கும். ஆடக் கூடியவர்களுக்குப் பாடவராது. பாடவல்லவர்கள் சரியாக ஆடமாட்டார்கள். அதிலும் ஆடிக்கொண்டே பாடுவது மிகவும் சிரமமானது. நாடகக் கலைகளுள் கூத்து கடினமான கலையே. இத்தகைய கலையை முறைப்படி பயின்று பெண்களும் இந்த அரிய கலையில் ஈடுபடவேண்டும் என்ற முனைப்புடன் ஈடுபட்டு வரும் பூங்கொடி அருந்தவநாதன் அவர்களை ஆழத்துமுத்துக்களில் பதிவுசெய்வதில் தாய்வீடு பெருமை கொள்கிறது.

இவரது தந்தையார் நடமாடி இராஜரட்னம் அவர்களை அறியாதவர்களே இருக்கமுடியாது என்றளவுக்கு ஒரு பிரபலமான சகலகலா வித்தகராக விளங்கியவர். காங்கேசந்துறையைச் சேர்ந்த இவர் ஒரு எழுத்தாளர், கவிஞர், நாடக எழுத்தாளர், நடிகர் நாடக நெறியாளர், வானொலி நாடகத் தயாரிப்பாளர் என்று பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தவர். இவரது தாயார் ஏழாலையைச் சேர்ந்த பூரணம் என்பவர். சகோதரி கோதை அமுதன்.

தந்தையார் அரச ஊழியராக இருந்து மாற்றலாகிச் செல்வதால் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற பூங்கொடி தனது உயர்கல்வியை நடேஸ்வராக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். தனது பத்தாவது வயதில் மானம் காத்த மறத்தமிழன் என்ற சங்கிலியன் மன்னன் பற்றிய நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நாடகவுலகில் இவர் கால்பதித்தார். மகளை நாடகங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்ற தந்தையின் தூண்டுதல் காரணமாக 'பாசம்', 'தசரதச்சக்கரவர்த்தி', 'இன்னுயிரே உனைப் பிரிந்தால்' போன்ற பல பாடசாலை நாடகங்களில் பூங்கொடி பங்கேற்றார். கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் ஆசிரியராக அமைந்து போனதால் நடேஸ்வராக் கல்லூரி வாழ்வே பூங்கொடியின் கலையுலகினின் பொன்னான தருணங்களாகின. கலைப்பேரரசுவின் வழிகாட்டலில் பேச்சுப் போட்டிகள், சிறுகதைப் போட்டிகள் என்பவற்றில் பூங்கொடி பங்குபற்றிப் பல தங்கப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டார். மித்திரன் வாரமலர் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவர் பரிசு பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் கலைப்பேரரசுவின் நெறியாள்கையில் பல நாடகங்களில் பங்குகொண்ட இவர் தாளக்காவடி போன்ற ஆட்டவகைகளையும் அவரிடம் பயின்றார்.

இலங்கை வானொலிக்காக சிறுகதைகள், இசையும் கதையும் போன்றவற்றை எழுத ஆரம்பித்த பூங்கொடியின் பல ஆக்கங்களை கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் வானொலிக்காகத் தயாரித்தளித்தார். இலங்கை வானொலிக் கலைஞராகத் தெரிவான பூங்கொடி அவர்கள் சானா என்ற சண்முகநாதன், ஜோர்ஜ் சந்திரசேகரன், மதியழகன் போன்றோர் தயாரித்தளித்த பல வானொலி நாடகங்களில் பங்கேற்றார். 'வேரில்லா விருட்சங்கள்' என்ற வானொலித் தொடர் நாடகத்தில் கதாநாயகியாக நடித்து இவர் புகழ்பெற்றார் அந்நாடகத்தில் சிவசோதி (இளையபாரதி) கதாநாயகனாக நடித்தது குறிப்பிடத்தக்கது. K.S. ராஜா, P. விக்னேஸ்வரன், கமலினி செல்வராஜன், மதியழகன், ஜோர்ஜ் சந்திரசேகரன் ஆகியோருடன் வானொலியில் நடித்ததைப் பெரும் அனுபவமாக இவர் குறிப்பிடுவார்.



யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி கலைமாணிப் பட்டத்தில் தமிழில் சிறப்புப் பெற்ற இவர் பின்னர் கல்வியியல் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தான் கல்வி கற்ற நடேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியேற்ற இவர் தன்னை வழிகாட்டிய ஆசிரியர்கள் போலவே மாணவர்களுக்குத் தமிழையும் கலைகளையும் போதித்தார். இக்கல்லூரிச் சிறார்களை வைத்து இவர் பழக்கிய காத்தவராஜன் கூத்து பிரபலமாகப் பேசப்பட்டது. பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டிகளில் பல பரிசுகளை இக்கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இதன் பின்னர் பல பாடசாலைகள், ஊர் மன்றங்கள் போன்றவற்றில் இவரது நாடகங்கள் மேடையேறின.

கலைஞர் கருணானந்தசிவம் ஆதரவில் மேடையேற்றப்பட்ட சங்கிலியன் நாடகத்தில் சங்கிலியனாக வேடமேற்ற பூங்கொடி நடித்த ஆண்களை மிஞ்சும் வகையில் பாத்திரத்துக்குச் சிறப்புச் செய்தார் என மத்தியஸ்தர்களின் பாராட்டுக்களைப்பெற்றார். மேலும், பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் நெறியாள்கையில் மேடையேறிய காத்தவராஜன் சிந்து நடைக்கூத்தில் முத்துமாரியம்மனாக வேடமேற்ற இவர் கலையுலகில் புதிய பரிமாணத்தைத் தொட்டார். இந்நாட்களில் மாதனையைச் சேர்ந்த அண்ணாவியார் கணபதிப்பிள்ளை அவர்களை தன் குருவாக வரித்துக் கொண்டு அவரிடம் கூத்து ஆட்டங்களையும் பாட்டுக்களையும் இவர் பயின்றார்.

காத்தவராஜன் நாடகத்தில் அருந்தவநாதன் காத்தானாகவும் ரமணீகரன் சின்னவனாகவும் விமலநாதன் சிவனாகவும் மற்றும் விஜய பாஸ்கர், பாஸ்கரன், சைலஜா, அரசகுமாரி ஆகிய பல கலைஞர்கள் பங்கேற்றிருந்தனர். இலங்கையின் பல பாகங்களிலும் ஏறத்தாள 30 தடவைகள் இக்கூத்து மேடையேற்றப்பட்டது. இலங்கை வானொலியில் இக்கூத்தானது கமலினி செல்வராஜனின் தயாரிப்பில் ஒலிபரப்பாகியது. இது தவிர ரூபவாஹினித் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகிப் பத்திரிகைகளின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டது. காரைநகர் சிவன் கோவிலில் இக்கூத்து மேடையேற்றப்பட்ட போது முத்துமாரியம்மன் தோன்றிய காட்சியில் முதியவர்கள் எழுந்து வணங்கியது மறக்கமுடியாத சம்பவமாக இவர் நினைவு கொள்கிறார். மேடையேறும் நாட்களில் விரதம் இருந்தே கலைஞர்கள் இக்கூத்தில் பங்குகொண்டது குறிப்பிடத்தக்கது.

கலைஞர் அருந்தவநாதனைத் திருமணம் புரிந்த பூங்கொடிக்கு கீர்த்தனா, வித்தகன் என்ற பிள்ளைகள் உள்ளனர். பெற்றோரைப் போலவே பிள்ளைகளும் கூத்துக்கலையில் தற்போது ஈடுபட்டு வருவதை மேடைகளில் காணலாம்.

கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் இங்குள்ள ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களின் அருள்நெறி மன்றத்தில் நடத்தப்படும் வகுப்புகளில் தமிழ் ஆசிரியையாகவும், கத்தோலிக்க கல்விச் சபை பாடசாலையில் பகுதிநேர ஆசிரியையாகவும் பணியாற்றுகிறார். இங்கு பாடசாலை மாணவர்களுக்காக கூத்து, பட்டிமன்றம் போன்றவற்றை தயாரித்து அளித்து வருகிறார்.

இங்குள்ள முத்தமிழ் கலை மன்றத்தின் வருடாந்த விழாக்களில் நடைபெற்ற வள்ளி திருமணம் இசை நாடகத்தில் வள்ளியாகவும், சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சாவித்திரியாகவும் மேலும் தெருவெளி மரங்கள் என்ற நாடகத்தில் முக்கிய பாத்திரத்திலும் நடித்து அப் பாத்திரங்களுக்கு இவர் பெருமை சேர்த்தார். வில்லிசைக் கலைஞர் சின்னமணி அவர்கள் கனடாவில் மேடையேற்றிய காத்தவராஜன் என்ற சிந்து நடைக் கூத்திலும் பூங்கொடியே முத்துமாரியம்மனாகத் தோன்றினார்.

பாரதி கண்ட புதுமைப் பெண் போல தனது பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும் என்ற தந்தையார் நடமாடி இராஜரட்னத்தின் வழிகாட்டலிலும் ஆதரவிலும் கலையுலகில் கால்பதித்த கலைஞர் பூங்கொடி அருந்தவநாதன் மென்மேலும் எமது மரபுசார் கூத்துக்கலைக்குச் சிறப்புச் சேர்க்க வாழ்த்துகிறோம்.



sriskandan@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**